# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 31.07.2011

தேனீ இணைய
10வது வருடப
22.02 2002- 22.02.201



கடந்த மாத பதிவுகள்

முதற்பக்கம்
அதிரடி
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
கவிமலர்
தாயகம்
புளொட்
தூ
நெருப்பு
டெலோ நியூஸ்
பி.ஈ.ஓ.ரி.சுவிஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
அறிவுடன்
கிருத்தியம் பெண்ணியம்
புதியபாதை
அலை
பூர்வீகம்
பூந்தளிர்
எங்கள்தேசம்
சலசலப்பு
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
ரீவடை
இணையம்
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்

Asientribune
Lines-Magahzine
The lka academic
Tamil Week sldf
Uthr


## புலிகளின் வதை முகாமில் எனது அனுபவங்கள் (தொடர் - 7)

- மணியம்

மீண்டும் கூண்டுக்கு வெளியே



கதவைத் திறந்தவன் முதலில் என்னைக் கொண்டு வந்து விட்ட புலி உறுப்பினன். அவனது கையில் ஒரு அலுமினியச் சட்டி இருந்தது.

உள்ளே இருந்தவர்களைப் பார்த்து, "கோப்பையை எடுங்கோடா" என உத்தரவிடும் பாணியில் அவன் உரத்துக் கூறினான்.

அங்கு ஒரு மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த, மிகவும் நெளிந்து 'நோய்வாய்ப்பட்டு' அழுக்குடன் காணப்பட்ட, சில அலுமினியத் தட்டுகளை அங்கிருந்தவர்கள் எடுத்து நீட்டினர்.

அவன் கொண்டு வந்திருந்த சட்டியிலிருந்த கொத்து ரொட்டியை, கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கோப்பைகளில் எடுத்துப் போட்டான். பின்னர் அவர்களை நோக்கி, "புதிசா வந்த ஆளையும் சேத்து சாப்பிடுங்கோ" எனச் சொல்லிவிட்டு கதவை மூட ஆயத்தமானான்.

அதற்கிடையில் அங்கிருந்தவர்களில் ஒருவர், "அண்ணை குடிதண்ணீர் கொஞ்சம் வேணும்" என கெஞ்சும் பாவனையில் கேட்டார்.

தண்ணீர் கேட்டவருக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். வந்திருந்த புலி உறுப்பினனுக்கு 18 – 20 வயதிருக்கலாம். இன்னமும் அவனது மீசையில் சரியாகக் கருமை படரவில்லை. இருக்கும் இடம், ஸ்தானம் காரணமாக, அந்த ஐம்பது வயதுக்காரருக்கு அவன் 'அண்ணை'யாகியிருந்தான். இந்த அண்ணை விளையாட்டு, உள்ளுக்கை மட்டுமின்றி, வெளியிலும் உலா வருவதை நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன்.

"என்னடா நேத்துத் தந்த தண்ணி எல்லாத்தையும் குடிச்சு முடிச்சிட்டியளோடா? ஒட்டகப் பிறவியள்" என அவன் சொல்லிவிட்டு, கதவை அடிச்சுச்சாத்திப் பூட்டிக்கொண்டு போய்விட்டான். தண்ணீர் கேட்டவர் ஏமாற்றத்துடன் வந்து இருந்துகொண்டார்.

சிறிது நேரத்தில் மீண்டும் கதவு திறக்கப்பட்டது. முதலில் வந்தவனே மீண்டும் ஒரு வாளி தண்ணீருடன் நின்றான். வாளி கிணற்றடியில் உடுப்புத் தோய்ப்பதற்கு அல்லது மலசல கூடத்திற்குப் பயன்படுத்தப்படும் தோற்றத்தைக் காட்டியது. உள்ளேயிருந்தவர்களில் ஒருவன் அங்கிருந்த மண் குடத்தை எடுத்து நீட்ட, கொண்டு வந்த தண்ணீரால் அதை நிரப்பிவிட்டு மீண்டும் கதவைப் பூட்டிக்கொண்டு அவன் போய்விட்டான். அவன் இந்தச் சீவன்களுக்கு மனமிரங்கி உடனும் தண்ணீர் கொண்டு வந்ததைப் பார்த்தபோது, 'கல்லுக்குள்ளும் கூட ஈரம் இருக்கும்' என்று இதைத்தான் சொல்வார்களோ? என எண்ணினேன்.

அவன் போனதும், அங்கிருந்த அறுவரும் அவன் நான்கு தட்டுகளில் போட்ட கொத்து ரொட்டியை; சாப்பிடுவதற்குத் தயாரானார்கள். என்னையும் சாப்பிட வருமாறு அழைத்தனர். நான் எனக்கு பசிக்கவில்லை எனச் சொல்லி, அவர்களையே என் பங்கையும் சாப்பிடச் சொன்னேன்.

நான் இருந்த மன நிலையில், சாப்பாட்டைப் பற்றியே நான் சிந்திக்கவில்லை. 'பசி வந்தால் பத்தும் பறந்திடும்' என தமிழில் ஒரு வழக்குண்டு. அது இப்பொழுது என் விடயத்தில், 'பதற்றம் வந்தால் பசியும் பறந்திடும்' என மாறிவிட்டிருந்தது.

சாதாரண காலங்களில் என்றால,; கொத்துரொட்டி என்றதும், எனது பசி இன்னும் கூடுதலாக்கியிருக்கக்கூடும். ஏனெனில் அதன் சுவை. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, அந்தக்காலங்களில் இந்தக் கொத்துரொட்டி ஒரு விசேட உணவு. செலவானதும் கூட. ஆரம்பகாலங்களில் இதன் சுவையை முழுமையாக அனுபவிப்பதற்குப் பல இளைஞர்கள், யாழ் முஸ்லீம் வட்டாரத்திலிருந்த சாப்பாட்டுக் கடைகளுக்குச் செல்வது வழமை.

ஆனால் இயக்கங்கள் உருவான பிறகு, அவர்களது தேவை கருதி, மூலைக்கு மூலை இந்தக் கொத்துரொட்டிக் கடைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. ஏனெனில், அநேகமாக எல்லா இயக்கங்களினதும் 'தேசிய உணவாக' இருந்தது இந்தக் கொத்துரொட்டிதான். உதாரணத்துக்கு, நெல்லியடியில் ஒரு சாதாரண சாப்பாட்டுக் கடை நடாத்தி வந்த எமது தோழர் ஒருவர், குறிப்பிட்ட இயக்கமொன்றின் உறுப்பினர்கள் சாப்பிடுவதற்காக, அவர்களின் வற்புறுத்தலின் பேரில், தனது கடையை ஒரு கொத்துரொட்டிக் கடையாக மாற்றவேண்டி ஏற்பட்ட விடயத்தை நான் அறிவேன்.

கொத்துரொட்டி என்றால் அது உணவா அல்லது விளையாட்டுப் பொம்மையா என மக்கள் விழி பிதுங்கி நிற்கும், எனது இயக்கச்சி போன்ற மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் கூட, இயக்கங்களின் வருகையுடன் கொத்துரொட்டிக் கடையும் பிரசன்னமாகிவிட்டது என்றால் பாருங்களேன்!

எனவே எனது சக கைதிகள், 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி, புல்லுக்கும் கசியுமாம் ஆங்கே' என்பது போல, இயக்கப் 'பொடியள்' சாப்பிட்டு மீதமிச்சமாக வீசிய கொத்துரொட்டியை, ஆவலுடன் ஒரு கைபார்க்கப் புறப்பட்டதில் வியப்பதற்கு ஏதுமில்லை என்று எனக்குத் தோன்றியது. அதேநேரத்தில், பங்கிட்டுண்ணும் மானிடப் பாங்கில், என்னையும் அவர்கள் அழைத்தது, என் நெஞ்சைத் தொட்டது.

"யோசிச்சு ஒரு பிரயோசனமும் இல்லை தம்பி. ஏதோ வந்திட்டம். உயிரோடை திரும்பிப் போவமோ இல்லையோ எண்டு தெரியாது. இருக்கும்வரை சமாளிக்கத்தானே வேணும். நாங்கள் சாப்பிடாமல் இருக்கிறதாலை அவங்களுக்கு ஒரு நட்டமும் இல்லை. கொஞ்சமெண்டாலும் சாப்பிடுங்கோ" என, அவர்களில் வயதான ஒருவர் என்னை அன்புடன் வலியுறுத்தினார்.

ஆனால் அவர்களது அன்பான வேண்டுகோளை ஏற்று சாப்பிடும் நிலையில் நான் இருக்கவில்லை. அவர்கள் கூட, தமது முதல் நாள் சிறை வாழ்க்கையின் போது என்னைப்போல சாப்பிடாமல் இருந்திருக்கக்கூடும். இப்பொழுது அவர்களுக்கு எல்லாம் சகஜமாகிவிட்டது போல் தோன்றியது.

என்னை புலிகள் கைதுசெய்ததை எண்ணி, எனது மனைவி மற்றும் உறவினர்கள் அன்று 'செத்தவீடு' கொண்டாடியிருப்பார்கள் என்று நிச்சயமாக எனக்குத் தெரியும். பல நாட்களுக்கு எனது மனைவி அன்ன ஆகாரமின்றி பட்டினி கிடப்பாள் என்பதும் தெரியும். அதுவும் அன்றிரவு நான் சாப்பிட மறுத்ததிற்கு ஒரு காரணம். எனவே, அன்றிரவு சாப்பிடாமலே இருந்துவிட்டேன்.

அவர்கள் அந்தச் சாப்பாட்டை வழித்துத் துடைத்து உண்டதைக் கண்டபொழுது, மனதுக்குப் பெரும் துயரமாக இருந்தது. அந்தத் தட்டுகளைக் கழுவவேண்டிய தேவையில்லாத அளவுக்கு, அவர்கள் அதைச் சுத்தம் செய்திருந்தார்கள். உண்மையில் அவர்களுக்கு புலிகள் வழங்கிய அந்த உணவு கொஞ்சமும் போதாது. அவர்கள் வெளியிலிருந்த போது கடினமான உழைப்பாளிகளாக இருந்திருப்பார்கள் என்பதையும், விரும்பியதை உண்டு களித்திருப்பார்கள் என்பதையும், அவர்களது உடல் வாகு இன்னமும் பறைசாற்றிக்கொண்டு இருந்தது. என்ன செய்வது, பற்றாக்குறையைப் போக்க, மீதி வயிற்றைத் தண்ணீரால் நிரப்பிக்கொண்டனர்.


டன் தொலைக்காட்சி தொடர்புகட்கு



தேனீ இணையத்தளத்தி
தோழர் மணியம் தொடா
எழுதும் புலிகளின்
வதைமுகாம் அனுபவங்

புலிகளின் வதை
முகாம்களில் ஒன்றரை
ஆண்டுகள் துன்புற்ற தே
மணியம் எழுதும்
அனுபவத்தொடர்

யாழ்ப்பாணத்தில் சாதி
அரசியல் செயற்படும் மு

அரசாங்கத்துக்கும் த
தேசியக்
கூட்டமைப்புக்கும்
இடையேயான பேச்சு
வார்த்தை சாதகமாக
முன்னோக்கி நகர்கிற
- (1 )

அரசாங்கத்துக்கும் த
தேசியக்
கூட்டமைப்புக்கும்
இடையேயான பேச்சு
வார்த்தை சாதகமாக
முன்னோக்கி நகர்கிற
- (2

அந்த கைதிகளுக்கு புலிகள் அளித்துள்ள வசதிகள் பற்றி அறிய முற்பட்டேன். காலையில் மட்டும் அவர்களது காலைக் கடன்களைக் கழிப்பதற்காக, ஐந்து நிமிட நேரம் இரு துப்பாக்கி ஏந்திய புலிகளின் பாதுகாப்புடன் வெளியே அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று சொன்னார்கள். கிழமைக்கு ஒரு தடவை, ஒரு வாளி தண்ணீரில் 'குளிக்கும்' சலுகையும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

மேல்மாடியில் கடுமையான கட்டுக்காவலுடன் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிங்களப் பொலிசார், எக்காரணம் கொண்டும் வெளியே அழைத்துச் செல்லப்படுவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்ததாக எனது புதிய கைதித்தோழர்கள் சொன்னார்கள். ஒன்று வெளியே கொண்டு சென்றால், நன்கு பயிற்சி பெற்ற அவர்கள் தப்பியோட முயற்சிக்கக்கூடும். இரண்டாவது, அவர்கள் வெளியே வந்தால் அங்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகள் அவர்களைப் பார்த்துவிடுவார்கள். எனவே அவற்றைத் தவிர்ப்பதற்காக, அவர்களுக்கு மலசல கூடம், குளியலறை எல்லாமே உள்ளேயே அமைக்கப்பட்டிருந்தன.

அங்குள்ள நிலைமைகள் பற்றி தங்களுக்கு தெரிந்தவற்றை, தாங்கள் ஊகித்தவற்றை, ஒருவர் மாறி ஒருவர் எனக்கு சொல்லிக் கொண்டிருந்தனர். இவையெல்லாம் எனக்குப் புது அனுபவங்களாக இருந்தன. இந்த 'விடுதலை வீரர்கள்' நடாத்தும் சிறைமுகாம்களின் லட்சணத்தை, அவர்களை உருவாக்கி வளர்த்துவிட்ட தமிழ் பொதுமக்கள் கண்டால், நெஞ்சம் பதறித் துடிப்பார்களா அல்லது 'விடுதலைப் போராட்டம் என்றால் அப்படித்தான் இருக்கும்' என சப்பைக்கட்டு கட்டுவார்களா என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தேன். ஏனெனில் புலிகள் ரெலோ இயக்கத்தை அழித்த பொழுது, அதன் உறுப்பினர்களை துடிக்கப் பதைக்க சுட்டுக் கொன்ற போது, கொலைகாரப் புலிகளுக்கு குளிர்பானம் வழங்கி மகிழ்ந்தவர்களல்லவா எமது 'வீர மறத் தமிழர்கள்'!

அந்த கைதித் தோழர்களுடன் கதைத்ததில் நேரம் போனது தெரியவில்லை. நான் அவர்களைத் தோழர்கள் என்று அழைப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தன. வெளியே நாம் அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்த காலத்தில், கட்சி உறுப்பினர்களையும், உழைப்பாளி மக்களையும், ஒடுக்கப்பட்ட (குறிப்பாக சாதி ஒடுக்குமுறை) 'தோழர்' என்றே விழித்துப் பேசுவதுண்டு. அவர்களும் எம்மை உரிமையுடனும், வாஞ்சையுடனும் அவ்வாறே அழைப்பார்கள். எனக்கு இனி அந்தப் பாக்கியம் கிடைக்காது. இனிமேல் எனது உலகம் புலிகளின் சித்திரவதைச் சிறைக்கூடங்கள்தான். அங்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பலவிதமான கைதிகள்தான், இனிமேல் எனது புதிய தோழர்கள்.

நேரம் நள்ளிரவு 12 மணியை அண்மித்திருக்கும் என ஊகித்தேன். எனது சக கைதித்தோழர்களில் சிலர், வெற்று சீமெந்துத் தரையில் தம்மை மறந்து கண்ணயரத் தொடங்கிவிட்டிருந்தனர்.

அடுத்து எனக்கு என்ன நடக்கப் போகிறது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். கண்கள் தூக்கத்தைத் தழுவ மறுத்தன. திடீரென வெளியே சில காலடிச் சத்தங்களும், சிலர் கதைக்கும் குரல்களும் கேட்டன.
தொடர்ந்து எமது அறைக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்டதும், அங்கிருந்த அனைவரும் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டனர்.

அங்கு பிரசன்னமாகியிருந்த, என்னை முதலில் அறையில் கொண்டு வந்து அடைத்தவன் என்னைப் பார்த்து, "ஐயா வெளியாலை வாங்கோ" எனக் கூறினான்.

நான் மீண்டும் அங்கு கொண்டு வந்து விடப்படுவேனா என்று தெரியாத சூழலில், சில மணி நேரங்களே பழகிய அந்தச் சிறைத் தோழர்களிடம் கண்களால் விடைபெற்றுக் கொண்டேன்.

அந்த வீட்டின் வாசல் முகப்புக்கு நான் மீண்டும் கூட்டி வரப்பட்ட போது, மாலையில் என்னைக் கைதுசெய்த புலனாய்வுப் பொறுப்பாளன் சின்னவன், இன்னொருவனுடன் ஏதோ கதைத்துக்கொண்டு நிற்பதைக்; கண்டேன்.

தொடரும்.....

முன்னைய பதிவுகள்